# 16

## நாமகரணமற்ற கிறிஸ்தவம்:

# முடிவுரை

இது "நாமகரணமற்ற கிறிஸ்தவம்" என்பதன் மீதான நமது படிப்பை முடிக்கின்றது. இது நன்மையான சிலவற்றைச் செய்யும் என்று நான் நம்பிக்கையாய் இருக்கின்றேன். இதை எழுதியதில், நான் எனது கற்றறிவு அல்லது எனது தர்க்கத்தை(அவ்விதமானவை எனக்கிருப்பினும்)க் காட்சிப் படுத்த எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை. நான் ஒரே ஒரு நோக்கம் மட்டுமே கொண்டிருந்தேன், மற்றும் அது, பொதுவான/சாதாரண வாசகர் ஒருவர் அகராதியின் துணையின்றி இப்புத்தகத்தை வாசிக்குமளவுக்கு தெளிவாகவும் இனிமையாகவும் இருக்க வேண்டும் என்பதேயாகும். நான் தெளிவாய் எழுதியிருந்தால், நான் எளிமையான நடையில் எழுதியிருந்தால், நான் வசன ரீதியாக எழுதியிருந்தால், நான் நிறைவடைகின்றேன். இந்தப் பணிக்கான வேறு எவ்விதத் தற்காப்பு(வாதமு)ம் என்னிடத்தில் இல்லை. விமர்சகர்கள் விமர்சிக்க விரும்பினால், நான் போதிக்க முன் மொழிந்துள்ள பாடத்தை அவர்கள் விமர்சிக்கட்டும்.

இந்தப் பாடத்தில் போதிக்கப்பட்டுள்ள சத்தியத்தைத் தேவன் ஆத்துமாக்களை இரட்சிப்பதற்கும், தம்முடைய பரிசுத்தவான்களை ஒன்றாக்குவதற்கும், தம்முடைய சபை நாட்டப்பட்டுள்ள இடங்கள் யாவற்றிலும் அதைப் பலப்படுத்துவதற்கும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன். நான் மரித்த பிறகு என்னைப் பற்றி, "அவர் ஒரு கிறிஸ்தவராய் இருந்தார்" அதாவது நான் ஆவியில், வைராக்கியத்தில் மற்றும் தைரியத்தில் கிறிஸ்துவை உண்மையாய் பின்பற்றுகின்றவனாய் இருந்தேன் என்று அர்த்தப்படும் வகையில் கூற முடியும்படி ஜெபிக்கின்றேன்; அதாவது நான் அவருக்கு மட்டுமே உரியவனாயிருந்தேன்; அதாவது நான் இயேசுவைத் தவிர வேறு அதிகாரி எவரையும் கொண்டிருந்ததில்லை; அதாவது எனது குடியிருப்பு பரலோகத்தில் உள்ளது; மற்றும் அதாவது, உண்மையில் நான் பூமியில் அந்நியனும் பரதேசியுமாயிருந்தேன் என்று கூற முடியும்படி ஜெபிக்கின்றேன். நன்மை செய்ய, தீமையைத் தடுக்க, துன்மார்க்கத்தை வெற்றிகொள்ள, மற்றும் உலகை ஆசீர்வதிக்கச் செய்யப்பட்ட எனது முயற்சிகள் யாவும் அவர் மூலமாகவே, அவரால் செய்யப்பட்டுள்ளன; மனிதர்களுக்குள் அவர்களுடைய பரிசுத்த வாழ்வை மீண்டும் உண்டாக்க வேண்டும் என்பதே எனது வாழ்வின் நோக்கமாய் இருந்துள்ளது. அவருடைய இரத்தத்திற்குப் பதிலாக நான் எனது வாழ்வையே கொடுத்தேன் என்று கூறப்பட்டால், அதை விட வேறெந்த நினைவுச் சின்னமும் எனக்குத் தேவையில்லை.